பெறுநர். 30-06-2016

செயலாளர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பரிர்மானக் கழகம் ,
144, அண்ணாசாலை,
சென்னை – 2.

ஐயா

பொருள் த. மி.வா. – அட்டைப்பட்டியல் பிரிவு – வருவாய் மேலாளர்களுக்கு 1-1-2003 முதல் தேர்வு நிலை ஊதியமாக ரூ.8100 – 275 – 11525 சம்பளம் வழங்கிடக் கோருதல்.

பார்வை 1. சென்னை தொழிலாளர் தீர்ப்பாய்வம்,(தொழில் தகராறு எண்.18/2012-ல்) வழங்கிய 23-5-2016 தேதியிட்ட தீர்ப்பு.
2. தொழிலாளர் அலுவலர் 2 – சென்னை -108 – ந.க.எண்.m/217/16 நாள் 15-6-2016.

1. அட்டைப்பட்டியல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது முதல் வருவாய் மேலாளர்களுக்கான தேர்வுநிலை ஊதியம், அதற்கடுத்த உயர் பதவியான முதுநிலை வருவாய் மேலாளர் ஊதியம் வழங்கப்பட்டது. முதுநிலை வருவாய் மேலாளர் பதவி வாரிய உத்திரவு எண்.69 நாள் 25.11.2002 –ல் ரத்து செய்யப்பட்டது.

2. அன்றைய தேதியில் வருவாய் மேலாளர்களுக்கான தேர்வுநிலை ஊதியம் ரூ.5850-200-11050 ஆகும்.

3. எனவே இதர பணிப்பிரிவுகளுக்கு வழங்கப்படுவதைப் போல வருவாய் மேலாளர்களுக்கு அடுத்த பதவி உயர்வு ஊதியமான, கணக்கீட்டு அலுவலர் சம்பளம் ரூ.8100-275-15225 வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கைகள் நிர்வாகத்திடம் வைக்கப்பட்டது.

4. சங்கங்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு வருவாய் மேலாளர் தேர்வுநிலை ஊதியம் வாரிய உத்திரவு எண் 11 நாள் 8.2.2006-ல் ரூ.5850-200-11050-லிருந்து ரூ.8100-275-15225 என உயர்த்தி வழங்கப்பட்டது. இந்த உயர்வு 1.12.2002 முதல் அமுலுக்கு வரும் என்றும் கூறப்பட்டது.

--2

5. மேற்கண்ட உத்திரவுப்படி வட்ட நிர்வாகங்கள், ஊழியர்களுக்கு தேர்வுநிலை ஊதியத்தை மாற்றியமைத்து பணப்பலன்களை வழங்கியது.

6. ஆனால் சில ஆண்டுகள் கழித்து, அவர்கள் ஓய்வு பெற்றப்பின் தணிக்கைப்பிரிவு ஆட்சேபணை எழுப்பியது.

7. அதாவது ஏற்கனவே தேர்வுநிலை ஊதியம் 1.12.2002-லிருந்து அல்லது விருப்பத் தேதியான 1.1.2003-லிருந்து அப்போதைய தேர்வுநிலை ஊதியம் ரூ.5850-200-11050 வழங்கியவர்களுக்கு மீண்டும் 1.12.2002-லிருந்து அல்லது விருப்பத் தேதியான 1.1.2003-லிருந்து ரூ.8100-275-15225 என்ற சம்பளத்தை மாற்றி வழங்கியது தவறு என்று கூறியது. இதனால் ஊழியர்களின் ஓய்வூதியப்பலன்களில் பிடித்தம் செய்யப்பட்டது. மாதஓய்வூதியத்தில் ரூ.100-ம் குறைக்கப்பட்டது.

8. இதன் மீது எங்களது சங்கம் வாரிய நிர்வாகத்கிற்கு செய்த முறையீடு ஏற்றுக்கொள்ளப் படாததால் இப்பிரச்சனையில் நாங்கள் தொழில் தகராறு எழுப்பினோம்.

9. " *In the result, the award is hereby passed holding that, the selection grade Revenue Supervisors who have placed on selection grade as on 1.1.2003 are eligible to receive the pay in the pay band of Rs.8100-275-15525 and not on the pre-revised scale of pay.No.costs."*

மேற்காணும் தீர்ப்பின் நகலினை இத்துடன் இணைத்துள்ளோம். இத்தீர்ப்பு பார்வை 2-ல் காணப்படும் கடிதத்துடன் எங்கள் சங்கத்திற்கும் நகல் நிர்வாகத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளது என்தபையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

10. இந்த தீர்ப்பினால் பலன் பெறும் சுமார் 1000 பணியாளர்கள் ஏற்கனவே ஓய்வுபெற்று 65-லிருந்து 70-வரையான வயதினை கடந்துவிட்டார்கள் என்பதால் விரைவில் தீர்ப்பினை அமுல்படுத்தி இதுவரை பிடித்தம் செய்யப்பட்டத் தொகையினை திரும்ப வழங்குவதற்கும், மதாந்திர ஓய்வூதியத்தை திருத்தம் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்.